DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.10/2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.4 |
| Name | :பரத் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2023

-----

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை:

நான் குருவிளாம்பட்டியில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி 1 சமயராஜ் தெரியும். அவர் தற்போது சம்பவத்திற்கு பிறகு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த 25.04.2021 காலை சுமார் 10.00 மணியளவில் எதிரி சிலைராஜாவிற்கும், சாட்சி 1 சாமிராஜ்கும் 10 நாட்களுக்கு முன்பு சாட்சி 1ன் மனைவியிடம் எதிரி தொடர்பில் இருப்பதாக சண்டை வந்தது. சம்பவ தினத்தன்று சமத்துவபுரத்திற்கு அருகில் உள்ள மெக்கானிக்கடை அருகில் இருவருக்கும் வாக்குவாதம் வந்தது. அப்போது சத்தம் கேட்டு என் தோட்டத்தில் இருந்து போனேன். நான் போகும் போது எதிரி கையில் அருவாளை வைத்து சாட்சி 1ன் கழுத்தை பார்த்து

வெட்டினார் அவர் இடதுகையால் தடுத்த போது அந்த வெட்டு இடது கையில் விழுந்தது அதன்பிறகு மீண்டும் அருவாளால் சாட்சி 1ன் முகத்தை பார்த்து வெட்டும் போது சற்று விலகியதால் அவர் மூக்கில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு ஆட்கள் கூடினார்கள். அப்போது சாட்சி 1-ன் மகன் கருப்புசாமி அங்கு வந்தார். ஆட்கள் கூடியதும் எதிரி அருவாளுடன் அந்த இடத்தில் இருந்து கிழம்பி விட்டார். அங்கு இருந்தவர்கள் காயம்பட்ட சாட்சி 1 சாமிராஜை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம் நடந்து மறுநாள் என்னை போலிசார் ஊரில் வைத்து விசாரித்தார்கள். விசாரணையின் போது நான் தற்போது கூறியவாறு தான் கூறியுள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சாட்சி 1 சாமிராஜ்கு குடி பழக்கம் உண்டு என்றால் சரிதான். சம்பவ தேதியன்று சாமிராஜ் குடித்திருந்தாரா என்றால் சரியாக தெரியாது. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் காலை 10.00, 10.30 மணியளவில் நடந்தது. சம்பவம் நடக்கும் போது காலை 10.00 மணியளவில் நான் தோட்டத்தில் இருந்தேன். தோட்டத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 300ல் இருந்து 400 மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுது சாட்சி 1 சாமிராஜ் காயத்துடன் இருந்தாரா என்றால் கையிலும், மூக்கிலும் காயத்துடன் இருந்தார். காயம்பட்ட சாமிராஜை துண்டை எடுத்து கையில் அவருடைய மனையி கட்டு போட்டார். அவரை மருத்துவமனைக்கு

அவருடைய மகன், மருமகன் மற்றும் ஒருவர் அழைத்துச் சென்றார். எதிரி சாமிராஜை வெட்டிய பிறகு தான் நான் அங்கு வந்தேன் என்றால் இல்லை சத்தம் கேட்டு வந்தேன். நான் செல்லும் பொழுது சாமிராஜ் சுயநினைவுடன் தான் இருந்தார். சாமிராஜ்க்கு ஏற்பட்ட காயம் லேசான காயமா என்றால் இல்லை கொடுங்காயம் ஆகும். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது சுமார் 20 நபர்கள் கூடியிருப்பார்கள். நான் சாமிராஜ்க்கு உறவினர் என்றால் சரிதான். எதிரிக்கும், எனக்கும் முன் பகை உண்டு என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது போலிசார் வந்தார்களா என்றால் வரவில்லை. சாமிராஜ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வரை போலிசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் எழுதப்படாத காகிதத்தில் கையெழுத்து வாங்கினாரா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் என்னை குருவிளாம்பட்டியில் உள்ள எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ்,10.8.2023

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.